| இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024 | தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

**காலம் : 1-30 மணி** **பத்தாம் வகுப்பு - தமிழ்** **மதிப்பெண் : 50**

## பகுதி - 1

**குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (7x1=7)**

**2) ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ______
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு
   இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
2. **சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.**
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
3. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் இவ்வடி குறிப்பிடுவது ______
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ______
   அ) அகவற்பா ஆ) வெண்பா
   இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
5. இலக்கணக்குறிப்பு தருக: வண்ணமும் சுண்ணமும்
   அ) முற்றும்மை ஆ) வினைத்தொகை
   இ) பண்புத்தொகை ஈ) எண்ணும்மை
6. அகவல் ஓசை ______ பாவுக்குரியது
   அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா
   இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
7. **பொருந்தாததைக் கண்டறிக.**
   அ) யானைகள் பிணிக்கப்படும் - மக்கள் பிணிக்கப்படுவதில்லை
   ஆ) சிலம்புகள் புலம்பும் - மக்கள் புலம்புவதில்லை
   இ) மலைகள் மட்டுமே கலக்கமடையும் - மக்கள் கலக்கமடைவதில்லை
   ஈ) புனல் மட்டுமே அடைக்கப்படும் - மக்கள் அடைக்கப்படுவதில்லை

## பகுதி - 2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (5x2=10)**

8. **விடைகளுக்கேற்ற வினா அமைக்க.**
   அ) சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்
   ஆ) புறம் பற்றிய செய்திகளைக் கூறுவது புறத்திணையாகும்
9. பாசவர், வாசவர், பல்நிணவிலைஞர், உமணர் - சிலம்பு காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
10. குறிப்பு வரைக: அவையம்
11. **கலைச்சொல் அறிக.**
    1) Document
    2) Belief
12. **ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**
    1) கோயம்புத்தூர்
    2) கும்பகோணம்
13. "கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
    உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"
    அ) அடி எதுகையை எழுதுக.
    ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக. கொள்க, குரைக்க
14. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - 3

*குறிப்பு: ஏதேனும் 3 வினாவிற்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 18)* *(3x3=9)*

15. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.பா.ரா. கவிபாடுகிறார்?
16. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
17. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
18. அ) 'தூசும் துகிரும்' - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

*(அல்லது)*

ஆ) 'மாற்றம் எனது' - எனத்தொடங்கும் 'காலக்கணிதம்' பாடலில் 'அட்சய பாத்திரம்' வரை எழுதுக.

பகுதி - 4

*குறிப்பு: எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.* *(3x4=12)*

19. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில், 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.
20. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

*(அல்லது)*

*அலகிட்டு வாய்ப்பாடு தருக.*

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

21. ***காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.***



22. ***மொழிபெயர்க்க.***

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was fit for the cultivation, as it had the most fertile lands. The property of a farmer.depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight as considered indispensable by the ancient Tamil.

பகுதி - 5

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* *(2x6=12)*

23. சிலப்பதிகார மருவூர்ப்பாக்கம் வணிக வீதிகளை, இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

*(அல்லது)*

பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்கு பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

24. 'மங்கையராய் பிறப்பதற்கே' என்னும் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள சாதனைப்பெண்மணிகள் மூவரைப் பற்றி விவரித்து எழுதுக.

*(அல்லது)*

இராமானுசர் நாடகத்தைக் கதையாக எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net